# சங்க இலக்கியங்கள் இந்தியாவின் பொக்கிஷம்

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு




சென்னைப் பல்கலைக்கழக 165– ஆவது பட்டமளிப்பு விழாவில் மாணவருக்கு பட்டம் வழங்கிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு. உடன் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, பல்கலைக்கழக துணைவேந்தர் ச.கௌரி.

**சென்னை, ஆக. 6:** தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம்; நாகரிகம், கலாசாரத்தின் பிறப்பிடமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது என குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழக 165–ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்ற குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு,பல்கலைக்கழக அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள், பட்டச் சான்றிதழ்களை வழங்கி ஆற்றிய உரை:

நாகரிகம், கலாசாரத்தின் பிறப்பிடமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய பொக்கிஷம்; திருக்குறளில் பொதிந்துள்ள மகத்தான ஞானம் பல நூற்றாண்டுகளாக அனைவரையும் வழிநடத்தி வருகிறது.

தமிழகத்திலிருந்து தோன்றிய பக்தி மரபு துறவிகள் மூலம் நாடு முழுவதும் கொண்டு செல்லப்பட்டது. இங்குள்ள கோயில் கட்டடக் கலை, சிற்பங்கள் மனித குலத்தின் திறமைக்குச் சான்று.

**பெண் கல்வி:** பெண் குழந்தைகளின் கல்வியில் முதலீடு செய்வது நாட்டின் முன்னேற்றத்தில் முதலீடு செய்வதற்குச் சமம். படித்த பெண்களால் பொருளாதாரத்தில் அதிக பங்களிப்பை வழங்க முடியும்; பல்வேறு துறைகளில் தலைமைத்துவத்தை வழங்க முடியும்; சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

**மன அழுத்தம் கூடாது...** மிகவும் போட்டி நிறைந்த இன்றைய சூழலில், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம், நல்ல நிறுவனங்களில் சேர முடியாது என்ற பயம், மதிப்புமிக்க வேலை கிடைக்காதோ என்ற கவலை, பெற்றோர் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளின் சுமை ஆகியவை நம் இளைஞர்களிடையே கடுமையான மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

எந்தவொரு பதற்றத்துக்கும் மாணவர்கள் ஆளாகக் கூடாது. பெற்றோர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து, மாணவர்கள் எதிர்கொள்ளும் பல சவால்களைக் கடந்து செல்ல உதவ வேண்டும்.

வாழ்க்கையின் அடுத்த கட்டத்தைத் தொடங்கும்போது, மாணவர்கள் தங்கள் இலக்குகளை உயர்வாக நிர்ணயிக்க வேண்டும். அதே வேளையில் இலக்குகளால் நிர்ப்பந்தத்தைஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என்றார் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.

பட்டமளிப்பு விழாவின் மூலம் இளநிலை, முதுநிலை, ஆராய்ச்சிப் படிப்புகளை நிறைவு செய்த ஒரு லட்சத்து 4,416 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

விழாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி தலைமை வகித்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரையாற்றினார். முன்னதாக, பல்கலை. யின் துணைவேந்தர் ச.கௌரி வரவேற்றார்.

இதில் உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை, ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

## 6 குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய சென்னைப் பல்கலை.

'சென்னைப் பல்கலைக்கழகம் ஆறு குடியரசுத் தலைவர்களை உருவாக்கியுள்ளது' என குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்தார்.

விழாவில் அவர் பேசியதாவது:

1857–ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் இந்தியாவின் பழைமையான நவீன பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இது சமூக மாற்றத்துக்கும், முன்னேற்றத்துக்கும் ஓர் ஊக்கியாக இருந்து வருகிறது.

ஏராளமான அறிஞர்களையும், தலைவர்களையும், தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களையும் உருவாக்கி, கற்றலின் புகலிடமாகத் திகழ்கிறது. ஆறு குடியரசுத் தலைவர்களை சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்த முன்னாள் குடியரசுத் தலைவர்கள் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி, நீலம் சஞ்சீவ ரெட்டி, ஆர்.வெங்கட்ராமன், கே.ஆர். நாராயணன் மற்றும் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோரை நினைவுகூர்கிறேன்.

செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் உலகளாவிய திறமைகளை ஈர்க்கும் நிறுவனமாக சென்னைப் பல்கலைக்கழகத்தை வலுப்படுத்த முடியும்.

நாடும் உலகமும் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு கற்றல் அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதில் சென்னைப் பல்கலைக்கழகம் முன்னணியில் இருக்க வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தை உலகளாவிய சிறப்பு மையமாக முன்னேற்றுவதில் முன்னாள் மாணவர்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்க முடியும். தங்கள் தாயக கல்வி நிலையத்துக்கு முன்னாள் மாணவர்கள் கைம்மாறு செய்ய வேண்டும் என்றார் அவர்.

**கனவுகள் பெரிதாக இருக்கட்டும்**
-ஆளுநர் ஆர்.என்.ரவி

**வேலை கிடைத்தாலும் படிப்பதை நிறுத்தக் கூடாது**
-முதல்வர் ஸ்டாலின்

(செய்தி உள்ளே)

EVA STALIN

# பாரதியார் மண்டபமாக மாறிய ஆளுநர் மாளிகை தர்பார் அரங்கம்

## குடியரசுத் தலைவர் திறந்துவைத்தார்

**சென்னை, ஆக. 6:** சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் தர்பார் அரங்கு மகாகவி பாரதியார் மண்டபமாக பெயர் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து பெயர் மாற்ற கல்வெட்டை குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு திறந்து வைத்தார்.

ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இந்த அரங்கத்தில்தான் ஆளுநரின் அரசு விழாக்கள், முதல்வர் பதவியேற்பு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு விழாக்கள் உள்ளிட்டவை நடைபெறும். தற்போது இந்த தர்பார் அரங்கின் பெயர் பாரதியார் மண்டபம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பெயர் மாற்ற விழாவில் ஞாயிற்றுக்கிழமை இரவில் பங்கேற்ற குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு, பாரதியார் மண்டப பெயர் மாற்ற கல்வெட்டையும், அங்கு வைக்கப்பட்டிருந்த பாரதியார் உருவப் படத்தையும் அவர் திறந்துவைத்தார்.

பாரதியாரின் உருவப்படத்துக்கு குடியரசுத்தலைவர் திரெளபதி முர்மு, ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளை குடியரசுத் தலைவர் பார்வையிட்டார்.

ஆளுநர் மாளிகை விழாவுக்கு வந்த குடியரசுத் தலைவரை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, பொன்முடி, கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பி.கே. சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், ரகுபதி, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, சென்னை மேயர் ஆர்.பிரியா, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி, ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர் ரங்கராஜன், ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியின்போது, குடியரசுத் தலைவருக்கு மகாகவி பாரதியாரின் பேரன் அர்ஜுன் பாரதி பொன்னாடை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.






சென்னை ஆளுநர் மாளிகையில் தர்பார் அரங்கம் மகாகவி பாரதியார் மண்டபமாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட நிகழ்வில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியை பார்வையிட்ட குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு, ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், இசையமைப்பாளர் இளையராஜா, முன்னாள் ஆளுநர் ராஜேந்திரன். (வலது) ஆளுநர் மாளிகையில் 'பாரதியார் மண்டபம்' என்ற பெயர்ப் பலகையுடன் காட்சியளிக்கும் தர்பார் அரங்கம்.

## பழங்குடியினருடன் கலந்துரையாடல்

தமிழக ஆளுநர் மாளிகையில் பழங்குடியின பிரதிநிதிகளுடன் குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடினார்.

இந்த நிகழ்ச்சியில் இருளர், குறும்பர், தோடர் உள்ளிட்ட 8 பிரிவுகளைச் சேர்ந்த 32 பழங்குடியினர் கலந்துகொண்டனர். தாங்கள் தயாரித்த கைவினைப் பொருள்களை குடியரசுத் தலைவரிடம் அவர்கள் காண்பித்தனர். அதில் சுடுமண்ணால் செய்யப்பட்ட டெரகோட்டா பொம்மையை ஆர்வத்துடன் குடியரசுத் தலைவர் வாங்கிப் பார்த்தார்.

பின்னர் அவர்கள் மத்தியில் குடியரசுத் தலைவர் முர்மு பேசுகையில், மத்திய, மாநில அரசுகள் பழங்குடியினருக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அதை முறையாக பழங்குடியினர் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, வீடு கட்டும் திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள இவை பயனுள்ளதாக இருக்கும். மேலும், குழந்தைகள் நன்றாக கல்வி கற்க செய்ய வேண்டும் என்றார் அவர். இதில், ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலர் லட்சுமிபிரியா ஆகியோர் பங்கேற்றனர்.

# புத்தாக்கம் பெறும் 508 ரயில் நிலையங்கள்

## பிரதமர் மோடி அடிக்கல்

**புது தில்லி, ஆக. 6:** நாட்டில் உள்ள 508 ரயில் நிலையங்களை ரூ.24,470 கோடியில் மறுகட்டமைப்பு செய்வதற்கான பணிகளுக்கு பிரதமர் மோடி காணொலி முறையில் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசுகையில், இந்தியா மீதான உலகின் கண்ணோட்டம் பெருமளவில் மாறியுள்ளது. அதற்கு இரு முக்கியக் காரணங்கள் உள்ளன. 30 ஆண்டுகளுக்குப் பிறகு அறுதிப் பெரும்பான்மை கொண்ட அரசை மக்கள் தேர்ந்தெடுத்தது முதல் காரணம். அந்த அரசு முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்து, சவால்களுக்குத் தீர்வு கண்டு வருவது மற்றொரு காரணம்.

அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான இலக்கை நோக்கி இந்தியா பயணம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், ரயில் நிலையங்கள் மறுகட்டமைப்புத் திட்டமானது இந்திய ரயில்வே வரலாற்றில் புதிய அத்தியாயமாக இருக்கும் என்றார்.

**தமிழ்நாட்டில் 18 நிலையங்கள்:** அமிர்த பாரத் ரயில் நிலையம் திட்டத்தின் கீழ் 27 மாநிலங்களில் உள்ள ரயில் நிலையங்கள் மறுகட்டமைப்பு செய்யப்படவுள்ளன. அதிகபட்சமாக உத்தர பிரதேசம், ராஜஸ்தானில் தலா 55 ரயில் நிலையங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.



தமிழ்நாட்டில் சேலம், கரூர், திருப்பூர், போத்தனூர், தென்காசி, விருதுநகர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், விழுப்புரம், நாகர்கோவில், பெரம்பூர், திருவள்ளூர், அரக்கோணம், திருத்தணி, ஜோலார்பேட்டை, கும்மிடிப்பூண்டி, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு ஆகிய 18 ரயில் நிலையங்கள் ரூ. 381 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படவுள்ளன.

# சிறு தானியங்கள் பயிரிட 50,000 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு

**அமைச்சர் அர. சக்கரபாணி**



சென்னை தரமணியில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'சிறுதானிய கண்காட்சி தொடக்க விழாவில் உணவு, குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி. உடன், எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் தலைவர் செளமியா சுவாமிநாதன், நிர்வாக இயக்குநர் ஜி.என்.ஹரிஹரன், உணவு, விவசாய அமைப்பின் இந்திய பிரதிநிதி கொண்டா ரெட்டி சவ்வா, நியூயார்க் கொலம்பியா பல்கலை. பேராசிரியர் ரூத் டிஃப்ரைஸ், ஐ.நா. வின் உலக உணவுத் திட்டத்துக்கான இந்திய பிரதிநிதியும், இயக்குநருமான எலிசபெத் ஃபாரே உள்ளிட்டோர்.

**சென்னை, ஆக.6:** தமிழ்நாடு சிறு தானிய திட்டத்தின் கீழ் சிறு தானியங்கள் பயிரிட தமிழக அரசு 50,000 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளதாக உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்தார்.

எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப்) சார்பில், சென்னை தரமணியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறுதானியக் கண்காட்சியை தொடங்கிவைத்து அவர் பேசியதாவது:

ஐக்கிய நாடுகள் சபை நிகழாண்டை சிறுதானிய ஆண்டாக அறிவித்துள்ளது. சிறுதானியங்கள் குறித்த பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதனின் தொலைநோக்கு பார்வை தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் தற்போது அனைத்து சிறுதானியங்களும் விளைவிக்கப்படுகின்றன. முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறு தானியங்களை ஊக்குவிக்கும் எண்ணத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்துவருகிறார். குறிப்பாக, 20 மாவட்டங்களில் சிறு தானிய உற்பத்தியை பெருக்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு சிறுதானிய திட்டத்தின் கீழ் சிறு தானியங்கள் பயிரிட மாநில அரசு சார்பில் 50,000 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறுதானியங்களை பொது விநியோக திட்டத்தின் கீழ் சேர்ப்பதால் சிறுதானிய விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்வதுடன், சிறு தானிய உற்பத்தியும் பெருகி பொது மக்களின் உடல் நலமும் மேம்படும்.

சிறுதானிய உணவுகள் குறித்து விழிப்புணர்வு அதிகரிக்கும் வகையில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு சார்பில் சிறுதானிய உணவு விழாக்கள் நடைபெறும்.

இந்தசமுதாயம்எதிர்கொள்ளும் உடல் நல சிக்கல்களுக்கு சிறுதானியம் சிறந்த தீர்வாக அமையும் என மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். நீரிழிவு நோய்க்கு சிறு தானியங்கள் மருந்தாக உள்ளன. பொதுமக்கள் சிறுதானிய உணவுகளை விரும்பி சாப்பிடத் தொடங்கிவிட்டனர் என்றார் அவர்.

இந்நிகழ்வில், எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் தலைவர் செளமியா சுவாமிநாதன், நிர்வாக இயக்குநர் ஜி.என்.ஹரிஹரன், உணவு மற்றும் விவசாய அமைப்பு இந்தியாவின் பிரதிநிதி கொண்டா ரெட்டி சவ்வா, நியூயார்க் கொலம்பியா பல்கலை. பேராசிரியர் ரூத் டிஃப்ரைஸ், ஐ.நா. வின் உலக உணவுத் திட்டத்துக்கான இந்தியாவின் பிரதிநிதியும், இயக்குநருமான எலிசபெத் ஃபாரே உள்பட பலர் கலந்து கொண்டனர்.

EVA STALIN IAS AC

# விண்வெளி கழிவுகளைக் குறைக்க ஆய்வு: இஸ்ரோ தகவல்

**சென்னை, ஆக. 6:** செயற்கைக்கோள்கள், ஆய்வு கலன்களால் விண்வெளியில் கழிவுகள் உருவாகாமல் தடுப்பதற்கான புதிய முயற்சியை இஸ்ரோ முன்னெடுத்துள்ளது.

அதன்படி, அதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ள அண்மையில் 'பிஎஸ்எல்வி சி-56' ராக்கெட் மூலமாக 'பிஎஸ்-4' எனும் கருவி புவி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. தற்போது அது குறைந்த தொலைவுடைய தாழ்வட்டப் பாதைக்கு உந்தித் தள்ளப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஒரே பாதையில் செயற்கைக்கோள் மற்றும் ஆய்வுக் கருவிகள் வலம் வருவதால் ஏற்படும் விண்வெளிக் கழிவுகளைக் குறைக்க முடியும் என்றும் கூறியுள்ளது.

சிங்கப்பூருக்குச் சொந்தமான 'டிஎஸ்-சார்' செயற்கைக்கோள் உள்பட 7 செயற்கைக்கோள்களுடன் 'பிஎஸ்எல்வி சி-56' ராக்கெட் ஜூலை 30-ஆம் தேதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ராக்கெட்டின் 4-ஆம் நிலையில் 'பிஎஸ் - 4' எனும் ஆய்வு உபகரணம் புவி தாழ்வட்டப் பாதையைச் சுற்றி வருவதற்காக அனுப்பப்பட்டது.

புவி சுற்றுப் பாதையின் 536 கி.மீ. தொலைவில் நிலைநிறுத்தப்பட்ட அந்தக் கருவி, தற்போது 300 கி.மீ. தாழ்வட்டப் பாதைக்கு குறைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புவியின் தாழ்வட்டப் பாதையில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உலக நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. அதற்கான வாய்ப்புகளும், தேவைகளும் அதிகமாக உள்ளதைக் கருத்தில்கொண்டு அதில் சில ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இஸ்ரோ முன்வந்தது.

அதன்படி, விண்வெளியில் செயற்கைக்கோள்களும், ஆய்வு சாதனங்களும் மோதி கழிவுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகளை ஆராய பிஎஸ்-4 என்ற சாதனம் அனுப்பப்பட்டது. ஏறத்தாழ 25 ஆண்டுகள் புவி சுற்றுப் பாதையில் சுற்றி வரும் இந்த சாதனம், அதன் தொலைவைக் குறைத்தபிறகு வேறு எந்த செயல்பாடுகளையும் மேற்கொள்ளாது.

அதேவேளையில், அதில் அடங்கியிருக்கும் உயர் அழுத்தம் கொண்ட அபாயகரமான எரிபொருள், உட்பொருள்களை அது வெளியேற்றி விடும். இதன் காரணமாக பிற ஆய்வுக் கருவிகளுடன் மோதும்போது ஏற்படும் சேதம் குறைக்கப்படும். விண்வெளிக் கழிவுகள் உருவாகுவதும் தடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக கோப்பை செஸ்: குகேஷ் வெற்றி

**பாகு, ஆக. 6:** அஜர்பைஜானில் நடைபெறும் உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் டி.குகேஷ் 3-ஆவது சுற்றில் வெற்றி பெற்றார்.



அவர், 1.5 - 0.5 என்ற புள்ளிகள் கணக்கில் சக இந்தியரான நாராயணனை வீழ்த்தினார். இதர இந்தியர்களான விதித் சந்தோஷ், நிஹல் சரின், அர்ஜுன் எரிகைசி ஆகியோர் தங்களது சுற்றில் முதல் ஆட்டத்தின் முடிவில் போட்டியாளர்களுடன் சமநிலையில் இருந்தனர். பிரக்ஞானந்தா முதல் ஆட்டத்தில் வென்று முன்னிலையில் இருந்தார்.

மகளிர் பிரிவில் வைஷாலி - உக்ரைனின் முஸிசுக் மரியாவிடமும், திவ்யா தேஷ்முக் - ரஷியாவின் கோரியாச்கினா அலெக்சாண்ட்ரோவாவிடமும் தோல்வி (0-1) கண்ட, மேரி ஆன் கோம்ஸ் - பல்கேரியாவின் சலிமோவா நூர்கியுலுடனான முதல் ஆட்டத்தில் பின்தங்கியிருந்தார். கோனெரு ஹம்பி - ரஷியாவின் பதெல்கா ஒல்கா மோதல் முதல் ஆட்டத்தில் டிரா (0.5 - 0.5) ஆகியிருந்தது. அதேபோல் டி.ஹரிகா - ஜார்ஜியாவின் ஜவகிஷ்விலி லெலா (1-1) மோதலும் டிராவில் இருந்தது.

## வெள்ளி வென்றார் பிரணாய்

**சிட்னி, ஆக. 6:** ஆஸ்திரேலிய ஓபன் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் ஹெச்.எஸ். பிரணாய் ஞாயிற்றுக்கிழமை வெள்ளிப் பதக்கம் வென்றார்.




ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் அவர், 9-21, 23-21, 20-22 என்ற கேம்களில் சீனாவின் வெங் ஹாங் யாங்கிடம் போராடி வெற்றியை இழந்தார். இந்த ஆட்டம் 1 மணி நேரம் 30 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது. கடந்த மே மாதம் மலேசியா மாஸ்டர்ஸ் இறுதி ஆட்டத்தில் பிரணாயிடம் தோல்வி கண்ட வெங் ஹாங், தற்போது அவரை வென்றிருக்கிறார்.

இப்போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில் மலேசியாவின் பெய் வென் ஜாங், கலப்பு இரட்டையரில் சீனாவின் ஃபெங் யான் ஜீ/ஹுவாங் டாங் பிங் கூட்டணி, மகளிர் இரட்டையரில் தென் கொரியாவின் கிம் சோ யோங்/காங் ஹீ யோங் இணை, ஆடவர் இரட்டையரில் தென் கொரியாவின் காங் மின் ஹியு/சியோ சியுங் ஜே ஜோடி சாம்பியன் பட்டம் வென்றன.

# கின்னஸ் சாதனை படைத்த பன்னாட்டு மாரத்தான் போட்டி

## 73,206 பேர் பங்கேற்பு; வெற்றியாளர்களுக்கு முதல்வர் பரிசளிப்பு

**சென்னை, ஆக.6:** சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னாட்டு மாரத்தான்-2023' போட்டியில் உலகிலேயே முன்னெப்போதும் இல்லாத வகையில் 73,206 பேர் ஒரே நேரத்தில் பங்கேற்றனர்.

இதையடுத்து இப்போட்டி கின்னஸ் சாதனை படைத்தது. போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசுகளை வழங்கினார்.

**ஐஏஎஸ்-ஐபிஎஸ் அதிகாரிகளும்...:** மொத்தம் 50,629 ஆண்கள், 21,514 பெண்கள், 1,063 மூன்றாம் பாலினத்தவர் பங்கேற்ற இந்தப் போட்டிகள் 42 கி.மீ., 21 கி.மீ., 10 கி.மீ., 5 கி.மீ. என நான்கு பிரிவுகளாக நடைபெற்றன.

இதில் 500-க்கும் மேற்பட்ட ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் உள்ளிட்ட குடிமைப்பணி அதிகாரிகள், 1,500 கடலோரக் காவல் படை வீரர்கள் மற்றும் ராணுவ வீரர்களும் கலந்து கொண்டனர்.

சென்னை காமராஜர் சாலையில் உள்ள கருணாநிதி நினைவிடத்தில் 42 கி.மீ. மாரத்தான் போட்டியை அதிகாலை 4 மணி அளவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேருவும், காலை 5.30 மணியளவில் மற்ற மூன்று வகை மாரத்தான் போட்டிகளை விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் தொடங்கிவைத்தனர்.






சென்னை தீவுத்திடலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நினைவு மாரத்தான் போட்டியில் 73,206 பேர் கலந்து கொண்டு கின்னஸ் சாதனை படைத்ததற்கான சான்றிதழை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கிய கின்னஸ் உலக சாதனை குழுவினர். உடன் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர். (வலது) மாரத்தான் போட்டியில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர்.

**பரிசளிப்பு விழா:** போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா, சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது. மாரத்தான் போட்டிக்கு கிடைக்கப்பெற்ற 'கின்னஸ்' உலக சாதனை சான்றிதழை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையிலான குழுவினர் வாழ்த்து பெற்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசளித்தார். போட்டியில் பங்கேற்ற திருநங்கைகள், திருநம்பிகளுக்கு தலா ரூ.1,000 ஊக்கத்தொகையை திமுக இளைஞரணி சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

முன்னதாக, மாரத்தான் போட்டியில் பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.3.42 கோடியை சென்னை ராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சை மையத்துக்கு முதல்வர் அளித்தார்.

**'மாரத்தான்' சுப்பிரமணியன்:** விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை தற்போது அனைவரும் 'மாரத்தான்' சுப்பிரமணியன் என்று அழைக்கத் தொடங்கியுள்ளனர். நான் மேயராக இருந்தபோது, முன்னாள் முதல்வர் கருணாநிதியிடம் எந்தளவுக்கு பாராட்டை பெற்றேனோ, அதைவிட அவரிடம் அதிகமான பாராட்டைப் பெற்றவர் மா.சுப்பிரமணியன். மாரத்தான் போட்டியை கடந்த 3 ஆண்டுகளாக அவர் நடத்தி வருகிறார். கரோனா காலமான 2020-இல் கூட மெய்நிகர் போட்டியாக இதை நடத்தியிருந்தார்.

அப்போது பதிவுக்கட்டணமாக கிடைத்த ரூ.23 லட்சத்தை அரசிடம் பேரிடர் நிவாரண நிதியாகவும், 2021-இல் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் கிடைத்த ரூ.56 லட்சத்தை கரோனா நிவாரண நிதியாகவும் அவர் வழங்கினார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மாரத்தானில் 43,231 பேர் பங்கேற்றது ஆசிய சாதனையாக அமைந்தது. அதன்மூலம் கிடைத்த ரூ.1.22 கோடி தொகை 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது என்றார் முதல்வர் ஸ்டாலின்.

இந்நிகழ்ச்சியில் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா தூதர்கள், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, பொன்முடி, மனோ தங்கராஜ், மக்களவை உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சென்னை மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி, மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், மூத்த பத்திரிகையாளர் என்.ராம், அப்பல்லோ மருத்துவமனை துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி, காவேரி மருத்துவமனை தலைவர் சந்திரகுமார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாண் இயக்குநர் அஜய்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 'சமூகநீதி மாரத்தான்'

மாரத்தான் போட்டி பரிசளிப்புநிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: சென்னையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னாட்டு மாரத்தான் போட்டியில் 73,206 பேர் கலந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் 'கின்னஸ்' சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது சாதாரண மாரத்தான் அல்ல; சமூகநீதிக்கான மாரத்தான் என்றார்.

EVA STALIN IAS ACADEMY